**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி-5**

கோ.எண்:25-21/வருவாய்/உ.ந./2022 ஜவகர் நகர், தேதி 11 AUG 2022

# பொது ஏல அறிவிப்பு

உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான கோரிமேடு வணிக வளாகம் பகுதி – II ல் உள்ள முதல் மாடி வணிக வளகத்தில் நான்கு பெரிய வணிக அறைகளை ஓராண்டு காலத்திற்கு வணிகம் நடத்துவதற்கு உரிமம் பெற ஏல நிபந்தனைகளின் படி பகிரங்க **"பொது வாய்மொழி ஏலம்"** விட விண்ணப்படிவங்கள் வரவேற்கப்படுகிறது. வணிக அறைகளின் விபரங்கள் மற்றும் ஏல நிபந்தனைகளை உழவர்கரை நகராட்சி தலைமை அலுவலக விளம்பர பலகை மற்றும் நகராட்சி வலைதளமான www.oulmun.in -ல் தெரிந்து கொள்ளலாம். ஏல விண்ணப்பங்களை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களிலும் மற்றும் நகராட்சி வலைதளத்திலும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

ஏலத்தேதி: 26-08-2022 மற்றும் நேரம் மாலை 4.00 மணி

ஏலம் நடைபெறும் இடம்: உழவர்கரை நகராட்சி தலைமை அலுவலகம்,
ஜவகர் நகர், புதுச்சேரி.

ஏலப்படிவம் சமர்பிக்கும் கடைசி நாள்: 26-08-2022 மாலை 3.30 மணிவரை

**(ஆ. சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**

உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5

கோ.எண்:25-21/வருவாய்/உ.ந./20 22 ஜவகர் நகர், தேதி 11 AUG 2022

# பொது ஏல அறிவிப்பு

உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான கோரிமேடு வணிக வளாகம் பகுதி – II ல் உள்ள நான்கு பெரிய வணிக அறைகளை (4 Nos. of Commercial Halls) ஓராண்டு காலத்திற்கு நடத்துவதற்கான உரிமம் பெற கீழ்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி பகிரங்க **"பொது வாய்மொழி ஏலம்"** விட விண்ணப்பபடிவங்கள் வரவேற்கப்படுகிறது.

ஏலத்தேதி: 26-08-2022 மற்றும் நேரம் மாலை 4.00 மணி

ஏலம் நடைபெறும் இடம்: உழவர்கரை நகராட்சி தலைமை அலுவலகம், ஜவகர் நகர், புதுச்சேரி.

| வ. எண் | வணிக அறை எண் | ஏலம் கேட்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏலத்தொகை மாதம் ஒன்றுக்கு (ரூ.) | செலுத்த வேண்டிய முன்வைப்புத் தொகை (ரூ) | வணிக அறையின் அளவு (சதுர மீட்டர்) |
|---|---|---|---|---|
| 1 | 1 | 17,612/- | 8,800/- | 96.77 |
| 2 | 2 | 10,250/- | 5,130/- | 56.32 |
| 3 | 3 | 9,831/- | 4,950/- | 54.02 |
| 4 | 4 | 5,722/- | 2,860/- | 31.44 |

## ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. ஏலப்படிவம் புதுச்சேரி, ஜவகர் நகரில் உள்ள உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காசாளரிடம் ரூபாய் 500/- மற்றும் 5% சரக்கு மற்றும் சேவைவரி (GST) செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது உழவர்கரை நகராட்சி வலைதளமான www.oulmun.in னில் இருந்து பதிவிறக்கம் செய்து சமர்பிக்கலாம். பதிவிறக்கம் செய்த ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் போது ரூபாய் 500/- மற்றும் 5% GST சேர்த்து **"The Commissioner, Oulgaret Municipality, Puducherry"** என்ற பெயரில் வரைவோலையை (Demand Draft) ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஏலம் கேட்க விரும்புவோர் பூர்த்திசெய்து கையொப்பமிட்ட ஏலப்படிவம் மற்றும் அதற்குண்டான முன்வைப்புத் தொகையை ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்ற பெயரில் ஏதேனும் ஒரு அரசு அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் வரைவோலை (Demand Draft) கண்டிப்பாக ஏலப்படிவத்துடன் இணைத்து

சமர்பித்தல் வேண்டும். அவ்வாறு வரைவோலை சமர்ப்பிக்காத ஏலப்படிவம் நிராகரிக்கப்படும்.

3. பூர்த்தி செய்யப்பட்ட ஏலப்படிவம் அரக்கு முத்திரை இடப்பட்ட உறையினில் **"ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி"** என்று குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டும். உறையின் மேல் வணிக அறை எண் கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். **ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் 26-08-2022 மாலை 3.30 மணிவரை.**

4. ஏலத்தில் பங்கேற்போர் உழவர்கரை நகராட்சியில் பெறப்பட்ட வரி பாக்கியில்லா சான்றிதழை ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்தல் வேண்டும்.

5. ஏலம் அறிவிக்கப்பட்ட நகராட்சி முதல் மாடி வணிக வளாகத்தில் உள்ள வணிக அறைகளில் ஒரு நபர் ஒரு வணிக அறையை மட்டுமே ஏலம் எடுக்க முடியும். வெற்றி பெற்ற ஏலதாரர் மீண்டும் அதே முதல் மாடி வணிக வளாகத்தில் மீதமுள்ள வணிக அறைகளுக்கு ஏலத்தில் கலந்து கொள்ள இயலாது.

6. ஏலம் தொடர்பான விளக்கம் மற்றும் விதிமுறைகளை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தெரிந்துகொள்ளலாம்.

7. ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகை கேட்பவர் வெற்றி பெற்ற ஏலதாரர் ஆவார். ஏலம் எடுத்தவர் ஆறு மாத உரிமத் தொகையை பொறுப்பு தொகையாக அதேநாளில் ரொக்கமாக செலுத்துதல் வேண்டும். தவறினால் அவர் செலுத்திய முன்வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் இரண்டாவது அதிகபட்ச ஏலதாரருக்கு ஏலத்தொகை அனுமதிக்கப்பட்டு உரிமம் வழங்கப்படும்.

8. ஏல தொகையை செலுத்திய தேதிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு அதற்குரிய உரிமம் வழங்கப்படும்.

9. விண்ணப்பம் அளித்த நபர்கள் மட்டுமே ஏலத்தில் பங்குபெற அனுமதிக்கப்படுவர். வெற்றி பெறாத ஏலதாரரின் முன்வைப்பு தொகை திருப்பி தரப்படும்.

10. ஏலம் எடுத்தவர் மாதாந்திர உரிமத் தொகையை பிரதி மாதம் 5ம் தேதிக்குள் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். தவறினால் அந்த மாதம் 10ம் தேதிக்குப் பிறகு உரிமத்தை ரத்து செய்து விட்டு மறு ஏலம் நடத்தப்படும்.

11. ஏலத்தை எவ்வித காரணம் காட்டாமல் ஏலத்தை ரத்து செய்யவோ அல்லது தள்ளி வைக்கவோ நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

12. வெற்றி பெற்ற ஏலதாரர் மின்கட்டணத்தை பிரதி மாதமும் தவறாமல் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் அவருக்கு வழங்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ஆ. சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**